அனுப்புனர்.

N.நெல்லை கோபால்,
மூத்த பத்திரிகையாளர்,
ஸ்ரீகாமாட்சி பப்ளிகேஷன்,
"நமது அரண்" என்ற சமூக அரசியல் புலனாய்வு மற்றும்,
விபத்து தடுப்பு விழிப்புணர்வுக்கான இதழின் ஆசிரியர்.
54 ஓம் சக்தி நகர், சர்வீஸ் ரோடு, வானகரம், போரூர்
சென்னை 116. செல்: 9994478389/11-05-2025.

பெறுநர்,

1) மாண்புமிகு, முதல்வரின் தனிப்பிரிவு அலுவலகம்.
தலைமைச்செயலகம். சென்னை 09.

2) உயர்திரு. தமிழ்நாடு விழிப்பு பணி ஆணையரகம்.
தலைமைச் செயலகம். சென்னை 09.

3) உயர்திரு. இயக்குநர் அவர்கள். DVAC
ஆலந்தூர். சென்னை.

4) உயர்திரு. காவல் ஆணையர் அவர்கள்.
வேப்பேரி, சென்னை.

5) உயர்திரு துணைகாவல் ஆணையர் அவர்கள்.
கோயம்பேடு . சென்னை

பொருள்:

சென்னை, வானகரம் மற்றும் மதுரவாயல் காவல் நிலைய காவல் ஆய்வாளர் பூபதிராஜா மீது ஊழல் புகார் ஒன்றை கடந்த 09-05-2025-ல், என்னால் பதிவிடப்பட்டு, 1,மாண்புமிகு. முதல்வர், 2,தமிழ்நாடு விழிப்பு பணி ஆணையர், 3,DVAC இயக்குனர், 4,சென்னை மாநகர காவல் ஆணையர், 5,துணை காவல் ஆணையர் திரு. அதிவீரபாண்டியன் அவர்களுக்கும், மின்னஞ்சல் மற்றும் தபால் மூலமாகவும் அனுப்பப்பட்டது. இதனால், என் மீது கோபமடைந்த வானகரம் மற்றும் மதுரவாயல் காவல் ஆய்வாளர் பூபதிராஜா அவர்கள், எனது Tealogy -ன் கடை, மற்றும் இரு சக்கரவாகனம் PARKING மற்றும், எனது ஜெராக்ஸ் மற்றும் ஸ்டிக்கர் கடையில் பணியாற்றும் ஊழியர்களிடம் வந்து விசாரணை செய்வதும், அவர்களை மிரட்டுவதும், என்னை பழிதீர்க்கும் நடவடிக்கைக்காக, என் மீது, பொய் வழக்கு புனைவதற்காகவும், அவர்களது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வது, எனது பணியாளர்களிடத்தில் வேண்டுமென்றே காக்கி சீருடையில் இருந்து வம்பு இழுத்து வருவதும்,அவரது தலைமையில் பணியாற்றும் SI, SSI , காவலர்களை அனுப்பி தொந்தரவு செய்வதுமாய் உள்ளதால், தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளம் காவல்நிலையத்தில், கடந்த 2020 - ஜூன் 19-ம் தேதி நடந்த தகப்பன் - மகனான ஜெயராஜ் - பெனிக்ஸ்-ன்

லாக்கப் மரணத்தின் சம்பவம் போல், வானகரம் - மதுரவாயலின் காவல் ஆய்வாளர் பூபதிராஜா தூண்டுதலின் பேரில், சம்பவம் நடந்து விடுமோ என அச்சம் கொள்கிறேன். எனவே, எனது புகார் தொடர்பாக, இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும், எனது அலுவலக CCTV காட்சிகளை பார்த்தும், என்னையும், எமது ஊழியர்களையும் அழைத்து, உயர் அதிகாரிகளின் தலைமையில் விசாரணை செய்து, எங்களிடம் இருக்கும் ஆவணங்களை பெற்று, இப்புகாரின் மீது உரிய வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க கோருவது.

மூத்த பத்திரிகையாளரும், மூத்த குடிமகனான, சமூக சேவகரும் "நமது அரண்" என்ற சமூக அரசியல் புலனாய்வு மற்றும் விபத்து தடுப்பு விழிப்புணர்வுக்கான இதழின் ஆசிரியர் நெல்லை கோபால் -ன் பணிவான வணக்கங்கள்.

வானகரம் - மதுரவாயல் காவல்நிலைய சரகத்தில், நெல்லையப்பர் எண்டர்பிரைஸஸின் கீழ் Tealogy என்ற தேநீர் கடையும், ஸ்ரீகாமாட்சி பப்ளிகேஷன் என்ற பெயரில், "நமது அரண்" புலனாய்வு இதழ் ஒன்றை நடத்தியும், ஒரு ஜெராக்ஸ் கடை, ஸ்டிக்கர் Shop மற்றும் ஒட்டுநர் பயிற்சி பள்ளியும், மற்றும், இருசக்கரவாகனம் நிறுத்தும் PARKING Stand- இரண்டு எண்ணிக்கையினை நிறுவி, பதினைந்து நபர்களுக்கான தொழிலாளர்களோடு நடத்தி வரும் என்னால், Tealogy - கடையினையும் இரவு நேர கடையாக நடத்த முயன்ற போது, எனக்கான அனுமதி மறுக்கப்பட்டு, எனது கடையினை மூடச் சொல்லி, காவல் உதவி ஆய்வாளரான ரஜீத் அவர்கள் கூறினார், எனது கடையினை மூடச் சொன்னதற்கு காரணமும், என்னிடம் இருந்து மாதம், மாதம், 10,000 லஞ்சமாக எதிர்பார்த்ததுதான். இதற்கு நான் மறுத்தேன். அதே நேரத்தில், முறைப்படி அனுமதி கோரி, உரிய ஆவணங்களுடன் 08-05-2024 -ல், வானகரம் காவல் நிலையத்தில் நேரிலும், மற்றும் காவல் ஆணையருக்கு மின்னஞ்சல் மூலமாகவும் மனு அளித்து விட்டு, மறுநாள் இரவில் கடை நடத்த முயன்ற போது, இரவு சுமார் 10.30 to 11.30-க்குள், மதுரவாயல் SI தமிழ்செல்வன் எனது கடை ஊழியர்களை கூவி அழைத்து, உடனே கடையை மூடு என்றும், காவல் ஆய்வாளர் பூபதிராஜா கூறினார் என்றும் உத்திரவிட்டதால், உடனே எனது கடை சாத்தப்பட்டது. அதே நேரத்தில் எங்கள் கடை எதிரிலும், பக்கவாட்டிலும், உள்ள அனைத்து கடைகளும் திறந்திருந்தநிலையில் எனது கடையினை மட்டுமே இன்ஸ்பெக்டர் பூபதிராஜா மூடச் சொல்லியதால், எந்த பெர்மிஷனும் இல்லாமல் மற்ற கடைகள் எல்லாம் திறந்திருப்பதற்கான சூழல்கள் என்ன என்பதையும், நான் அறிந்ததால்,அதாவது ஒவ்வொரு கடையில் இருந்தும், காவல் ஆய்வாளருக்கு 10, 15, 20 என கடைக்கு ஏற்ப லஞ்ச தொகைகள் மாத மாமுலாக ரைட்டர் மூலமாக செல்வதாலும், நான் லஞ்சத்திற்கான இசைவுகளை தெரிவிக்காததினால், எனது கடையினை மூடச் சொல்லுகிறார்கள் என்பதையும் அறிந்ததால்,, இது குறித்து அரசுக்கும், ஊழல் தடுப்புத்தடுப்பு துறையினர், மற்றும் சென்னை மாநகர போலீஸ் கமிஷ்னருக்கும், காவல் ஆய்வாளர் பூபதிராஜா குறித்து ஊழல் புகார் ஒன்றை 09-05 - 2025-ல் என்னால் அளிக்கப்பட்டது. இதனால், என் மீது கோபம் கொண்ட காவல் ஆய்வாளர் பூபதிராஜா அவரது தலைமையில் பணியாற்றும், SI, SSI , காவலர்கள் என பலரையும், காக்கி சீருடையில்,எனது நிறுவனத்திற்கு அனுப்பி வைத்து, அவர்களிடம் வேண்டுமென்றே காக்கி சீருடையில் வம்பு செய்து வருவதோடு, அவரது மிரட்டலை தொடர்ந்து வருகிறார்.

நேற்று (10-05-2025) அன்றும், இரண்டு காவலர்கள் எனது இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்திற்கு வந்த போது, வெளியில் நின்று பேசிக் கொண்டிருந்த, கோபால் மற்றும் ஹரிஸ் என்பவரிடமும் "என்ன ரோட்ல நின்னு தண்ணியடிக்கிறீயா? என்றும், பைல என்னது, பாட்டில் தானே என்றும் உம்மேல ... DD கேஸ் போடனும் என்றதும், தண்ணியடிக்காமல் இருக்கிற போது, அதுவும் நான் நடந்து வருகிற நிலையில் என் மேல எப்படி DD கேஸ் போடுவீங்கன்னு எதிர்கேள்வி கேட்டதும், வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தும், எங்களது CCTV காட்சியில் உள்ளது. இப்படி வேண்டுமென்றே எமது ஊழியர்களிடம் வம்புக்கு இழப்பதும், என்னை பற்றி, எங்களது ஊழியர்களிடம் வந்து விசாரணை செய்வதும், நெல்லை கோபால் என்ன ... "பெரிய அப்பாடக்கரா " - என கேள்வி எழுப்புவதும், என்னை பற்றி மரியாதை குறைவாகவும், ஏளனமான பேச்சுக்களை பேசி, எனது ஊழியர்களின் மனதை கஷ்டப்படுத்துவதும், அவர்களுக்குகோபத்தை தூண்டுவதும், அவர்களுக்கான பயத்தை வரவழைத்து, ஊழியர்களை மிரள வைப்பதும், போன்ற பல்வேறு இடைஞ்சல்களை செய்து வருகிறார் காவல் ஆய்வாளர் பூபதிராஜா.

காவல் ஆய்வாளரின் விருப்பத்திற்கு ஏற்ப,நான், மாமுல் தராமல், இத்தனை நிறுவனத்தை நடத்துகிறேன் என்ற பொறமையிலும், அவரது மாமுல் நோக்கத்திற்கு அடிபணியாததால் மட்டுமே இன்ஸ்பெக்டருக்கு என் மீது கோபம் கொப்பளிக்கிறது. அது மட்டுமல்லாது, இன்ஸ்பெக்டர் மற்றும் காவலர்கள் மற்றும் SI-மீதும் நான் அரசுக்கு புகார் அளித்ததால், அதன் கோப வெளிப்பாட்டிலும், அவரது அதிகாரதுஷ்பிரயோகங்களை செய்து வருகிறார். இப்படியொரு ஈகோ - தான், கடந்த சில வருடங்களுக்கு முன் தூத்துக்குடி மாவட்டம், காவல்நிலையத்தில் அப்பா - மகன் இருவரது லாக்கப் மரணத்திற்கும் காரணமாகும். அதே போல், இப்போதும், இவரது தலைமையில் பணியாற்றும், காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் கொண்டு, என்னைப் பற்றி, எமது நிறுவனத்திற்கே வந்து விசாரிப்பதும், கோபம் மூட்டுகிற வகையில் தகாத வார்த்தைகளை பேசுவதும், ஊழியர்களை வந்து மிரட்டுவதும், இரவு நேரத்தில் எனது டீ கடையினை மட்டும் மூடச் சொல்லி மிரட்டுவதும், ஊழியர்களின் போனை புடுங்கி கொண்டு செல்வது என்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவரது அதிகாரத்தை துஷபிரயோகம் செய்து மிரட்டி வருவதால், என் மீது பொய்வழக்கு பதிவு செய்து, காவல்நிலையத்தில் வைத்து சித்திரவதை செய்யலாம் என தெரியவருகிறது.

நான் கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சை செய்தும், விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டு, முதுகு (SPINAL CORD) தண்டுவடத்தில் Artificial DISK பொருத்தியும், இதற்கு உட்கொண்ட மருந்துகளால் எனது இரண்டு சீறு நீரகங்களும் பாதிகப்பட்ட நிலையில், காது வலியிலும்,கண்பார்வை குறைந்தும், எனது உறுப்புகள் ஒவ்வொன்றும் பாதிக்கப்பட்டு நான் மிகம் மோசமான நிலையில் இருந்து வருவதால், காவல் ஆய்வாளரின் லேசான சித்திரவதைகளே எனக்கு மரணத்தை ஏற்படுத்தி லாக்கப் மரணத்திற்கு வழி வகுத்திடும் என்பதால், என் மீது பதியப்படும் பொய் வழக்குகளாக இருந்தாலும் சரி, அல்லது காவல் துறையினரின் சித்திரவதையில் நான் மாண்டாலும் சரி, அதற்கு காரணம் காவல் ஆய்வாளர் பூபதிராஜா - வின் லஞ்சத்திற்காக அடாவடியாக நடந்து கொள்ளும் மிரட்டல்களே காரணம் என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், காவல் ஆய்வாளர் பூபதி ராஜா அவர்களது சக காவலர்கள், மற்றும் உதவி காவல் ஆய்வாளர்கள் கொண்டே எனக்கும், எனது ஊழியர்களுக்கும் மிரட்டலை தொடர்வதும், இரவு கடையினை திறக்க விடாமல் தடுப்பதையும் சர்வசாதரணமாக காவல் ஆய்வாளர் பூபதிராஜா செய்து வருவதால், இவரால் சில சமூகவிரோதிகளை தூண்டி விட்டு கூட, எனக்கும், எனது பணியாளர்களுக்கும் ,எந்தவொரு சம்பவத்தையும் இவரால் நடத்தப்படலாம் என்பதால், எனக்கு ஏற்படும் உயிர்சேதம் மற்றும் பொருள் சேதங்கள் சமூகவிரோதிகளால் ஏற்பட்டாலும் கூட, அதற்கும் காவல் ஆய்வாளர் பூபதிராஜாவும், அவரது தலைமையில் பணிபுரியும் காவலர் மற்றும் காவல் அதிகாரிகளுமே முதல் காரணமாக இருப்பார்கள் என தெரிவித்துக் கொள்வதால், எனக்கு எதிராக அமையும் எந்தவொரு சம்பவத்திற்கு பிறகு மேற்படி அதிகாரிகளையும் குற்றவாளியாக சேர்த்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என பணிந்து கோருகிறேன்.

குறிப்பு:
காவலர்களால் கொண்டு வந்து நிறுத்தப்படும் இருசக்கரவாகனங்கள் ஒருவருடத்துக்கு மேலாகி 5,000, பத்தாயிரம் என பாக்கி விழுந்தாலும், சில நூறுகளை மட்டும் கொடுத்துவிட்டு அந்த வாகனங்களை எடுத்துச் செல்வதும், சில வாகனங்கள் ஒரு வருட காலமாக எடுத்துச்செல்லாமல் இருப்பதும்,இப்போதும் நீடிக்கிறது.இதில் சில வாகனங்கள் விடுவிக்கப்பட்டாலும் அதற்கான parking கட்டணமும் தருவதில்லை. ஆனாலும், காவலர்கள் என்பதால் நாங்கள் அனுசரித்து சென்றாலும், ஒரே தடியாக எங்களை அடிமைபடுத்தினால் அவை நியாம்தானா?

பணிவுடன்.

N. நெல்லை கோபால்.
N.நெல்லை கோபால்.
மூத்த பத்திரிகையாளர்.
9994478389/11-05-2025

# போலீஸுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டு திறந்திருக்கும் இரவு நேர கடைகள்.













































எனது கடை ஊழியர்களை அழைத்து, கடையை மூட சொல்லி வானகரம் SI ரஜித் உத்தரவிட்ட போது




மதுரவாயல் உதவி காவல் ஆய்வாளா தமிழ் செல்வன் எனது கடை ஊழியர்களை அழைத்து மூடச் சொல்லி உத்தரவிட்ட போது...











எனது கடைக்கு வந்து SI கள் உரையாடிய போது

எனது இரு சக்ர வாகன Stand -க்கு வந்து ஊழியர்களை மிரட்டும் காவலர்கள்






எனது Stand -ல் பணியில் இருக்கும் ஊழியரிடம், உன் மேல D.D கேஸ்போடனும் நீ தண்ணி போடுவியா? என கேள்வி எழுப்பியும், ஸ்டேஷனுக்கு வா என அழைப்பதும், எதுக்கு இத்தனை பேர் டூட்டி பாக்குறீங்க என ஊழியரை மிரட்டும் வானகரம் காவலர்கள்.




👆 என்னால் லஞ்சமாக மாத (மாமுல் ) கொடுக்கப்படாததால், கடையை திறக்க அனுமதிக்காத போலீஸ். அதே நேரத்தில் அருகில் லைட் எரியும் கடை மாமுல் தருவதால அவர்களுக்கும் மற்றும் மாமுல் தரும் மற்ற அனைத்து கடைகளுக்கும் அனுமதி அளிக்கும் மதுரவாயல் இன்ஸ்பெக்டர் பூபதி ராஜா,